**சுருக்கம்**

பேரிடர் மேலாண்மை–COVID-19 – அரசு விரைவு போக்குவரத்து கழகம் – பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப் படுத்தப்பட்டவர்களின் பயன்பாட்டிற்காக 2,82,000 எண்ணிக்கையில் 1 லிட்டர் தண்ணீர் பாட்டில்கள் கொள்முதல் செய்யப்பட்டதற்கான தொகை ரூ.28,20,000/– தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணைய நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து–ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மோலாண்மைத்துறை பேரிடர் மேலாண்மை அலகு, பே.மே. 2 பிரிவு**

**அரசாணை (நிலை) எண்.331** **நாள் 24.03.2021**

**சார்வரி, பங்குனி 11,**
**திருவள்ளுவர் ஆண்டு 2052**

**படிக்க:**

1. அரசாணை (நிலை) எண் 161, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, பே.மே II பிரிவு, நாள் – 19.03.2020
2. தலைமை பொறியாளர் (கட்டிடம்) பெருநகர சென்னை மாநகராட்சி, கடித எண் பி1 / 826 / 2020, நாள்.01.07.2020 மற்றும் 13.01.2021.
3. நிருவாக இயக்குநர், அரசு விரைவுப் போக்குவரத்து கழகம் தமிழ்நாடு லிமிடெட், சென்னை கடித எண்.002 / பக8 / பட்டியல் / அ.வி.போ.க / 2020, நாள்.23.01.2021 மற்றும் 15.02.2021.
4. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் கடித எண்.இ.பே.1/ 563/2020 நாள் 27.02.2021.

*******

**ஆணை:**

மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிர்வாக ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்களின் பயன்பாட்டிற்காக விநியோகம் செய்யப்பட்ட அம்மா குடிநீர் பாட்டில்கள் கொள்முதல் செய்யப்பட்டதற்கான மொத்த தொகை ரூ.28,20,000/–னை வழங்க சென்னை மாநகராட்சி தலைமை பொறியாளரிடம் (கட்டிடம்) கோரப்பட்டதில், மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து கொரோனா தடுப்பு பணி தொடர்பாக, அரசு விரைவு போக்குவரத்து கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து பெற்றுக் கொள்ளுமாறு மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது என அரசு விரைவுப் போக்குவரத்து கழக நிருவாக இயக்குநர் அவர்கள் தெவித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

2. மேலும், கொரோனா நோய் தொற்று முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பாக, சுகாதாரத்துறை உள்ளிட்ட 10 துறைகளுக்கு, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ரூ.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிர்வாக ஆணையரின் செயல்முறை ஆணையின் படி கொரோனா நோய் தொற்று முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அரசு விரைவுப் போக்குவரத்து கழகத்திற்கு ரூ.28 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும், மேற்படி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் அரசு விரைவுப் போக்குவரத்து கழகம் தமிழ்நாடு லிமிடெட் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.28 இலட்சம் தொகையானது, பேருந்துகளுக்கு

கிருமி நாசனி தெளிப்பது மற்றும் சுத்தம் செய்தல் போன்ற பணிகள் தொடர்பாக, ஜீன் 2020 மாதத்திற்கு முன்னதாக செலவு செய்யப்பட்டுள்ளதாக அரசு விரைவுப் போக்குவரத்து கழக நிருவாக இயக்குநரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்களின் பயன்பாட்டிற்காக விநியோகம் செய்யப்பட்ட அம்மா குடிநீர் பாட்டில்கள் கொள்முதல் செய்யப்பட்டதற்கான மொத்த தொகை ரூ.28,20,000/–னை மாநில பேரிடர் நிவாரண நிதியில் வழங்க கோரியுள்ளார். அதன் விவரம் பின்வருமாறு :–

| Sl. No | Invoice / Dated | Particulars | Quantity | Rate | | Amount | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | Rs. | Ps. | Rs. | Ps |
| 1 | 5823 / 24.7.2020 | Amma drinking water -Covid - 19 – Supply of ADW in 1 Litre Bottles – To various Locations on Greater Chennai cor-Ltd.<br>Dc.No.16001 to 16047 Dated: 2,3,4,6,8,15,16,17,18.7.2020 No's 1,06,400 x Rs.10/- per bottle | 106400 | 10 | 00 | 10,64,000 | 00 |
| | | Total | | | | 10,64,000 | 00 |
| 2 | 5876 / 04.9.2020 | Amma drinking water -Covid -19 – Supply of ADW in 1 Litre Bottles – To various Locations on Greater Chennai cor-Ltd.<br>Inv.No.<br>16048 – 16067 dt.25.7.2020<br>16067 – 16079 dt.12.8.2020 | | | | | |
| | | 16080 – 16086 dt.26.8.2020 | 83700 | 10 | 00 | 8,37,000 | 00 |
| | | 16087 – 16089 dt.31.8.2020 | 44900 | 10 | 00 | 4,49,000 | 00 |
| | | | 35000 | 10 | 00 | 3,50,000 | 00 |
| | | | 12000 | 10 | 00 | 1,20,000 | 00 |
| | | Total | 2,82,000 | | | 17,56,000 | 00 |
| | | **Grand Total** | | | | **28,20,000** | **00** |

(Rupees Twenty Eight Lakhs and Twenty Thousand Only)

3. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிர்வாக ஆணையர் தனது கடிதத்தில், நிருவாக இயக்குநர், அரசு விரைவுப் போக்குவரத்து கழகம் தமிழ்நாடு லிமிடெட் அவர்களின் கடிதத்தில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்களின் பயன்பாட்டிற்காக 2,82,000 எண்ணிக்கையில் 1 லிட்டர் அளவுள்ள குடிநீர் பாட்டில்கள் கொள்முதல் செய்யப்பட்டதற்கான தொகை ரூ.28,20,000/– னை மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து பெற்று வழங்கிட கோரிய முன்மொழிவு கவனமுடன் பரீசிலனை செய்யப்பட்டது. மேலும், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மேற்படி அரசு விரைவுப் போக்குவரத்து கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 28 இலட்சம் தொகையினை பேருந்துகளுக்கு கிருமி நாசனி தெளிப்பது மற்றும் சுத்தம் செய்தல் போன்ற பணிகளுக்காக ஜீன் 2020 மாதத்திற்கு முன்னதாக செலவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளதால், மேற்காணும் தொகையினை தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணைய நிதியிலிருந்து அரசு விரைவுப் போக்குவரத்து கழகத்திற்கு நிதி ஒதுக்கீடு வழங்கிட அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

4. மேற்காணும் சூழ்நிலையில், கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் கருத்துருவினை பரிசீலனை செய்த அரசு, மாநில செயற்குழுவின் ஒப்புதலுடன் அதனை ஏற்று, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியில், கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்களின் பயன்பாட்டிற்காக 2,82,000 எண்ணிக்கையில் 1 லிட்டர் அளவுள்ள குடிநீர் பாட்டில்கள் கொள்முதல் செய்யப்பட்டதற்கான தொகை ரூ.28,20,000/–(ரூபாய் இருபத்தெட்டு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணைய நிதியிலிருந்து அரசு விரைவு போக்குவரத்து கழகத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி–4ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணைய நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஆணையிடப்படுகிறது.

6. இவ்வாணை நிதி (வருவாய்) துறையின் அ.சா.எண். 15003/வருவாய் (நிதி) /2021, நாள் 23.03.2021–ல் பெறப்பட்ட இசைவுடனும், வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

அதுல்ய மிஸ்ரா
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**பெறுநர்**

கூடுதல் தலைமைச் செயலாளர் /
வருவாய் நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–600009.
ஆணையர் (பேரிடர் மேலாண்மை), தமிழ்நாடு பேரிடர்
அபாய தணிப்பு முகமை, சேப்பாக்கம், சென்னை–600005.
நிர்வாக இயக்குநர் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், சென்னை–2.
முதன்மை கணக்காயர், சென்னை–600018/600 035.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–600 008.

**நகல்**

கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
கூடுதல் தலைமைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600009.

முதன்மைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
முதன்மைச் செயலாளர், பொதுப்பணித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர்,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை
அவர்களின் முதன்மை தனிச் செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை–600009.
நிதி (வருவாய் / வ.செ–1 / வ.செ.–2/ வ.வ.–1) துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (அநமு) துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

24/3/21

**பிரிவு அலுவலர்**

24/03/21